**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 2698/2025**

**Prosecution witness : ம.சா.1** **Date : 30.01.2026.**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் தறி மற்றும் மளிகை செய்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4ம் வகுப்பு படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் சீட்டு நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. பைனான்ஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை.

2) ஜலகண்டாபுரத்தில் உள்ள வங்கிகள் எனக்கு தெரியுமா என்றால் ளதெரியும். நான் வசூலுக்காக காசேலை தாக்கல் செய்த வங்கியின் பெயர் மத்திய கூட்டுறவு வங்கியாகும். எதிரி கொடுத்த காசோலை எந்த வங்கியை சேர்ந்தது என்றால் லட்சுமி விலாஸ் வங்கி ஜலகண்டாபுரம் கிளையை சேர்ந்ததாகும். எந்த தேதியில் நான் காசோலை பெற்றேன் என்றால் 25.01.2022ம் தேதி பெற்றேனா என்றால் கடன் நான் 30.01.2022ம் தேதி கொடுத்தேன். கடன் கொடுக்கும் போது எந்த ஆவணம் பெற்றேன் என்றால் எந்த ஆவணமும் பெறவில்லை.

3) ஜலகண்டாபுரம் லட்சுமி விலாஸ் வங்கி தெரியுமா என்றால் தெரியும். வங்கியில் காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் பணம் இல்லை என திருப்பப்பட்டது. என்ன காரணத்திற்காக காசோலை திருப்பப்பட்டதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் எந்த காரணம் என்று எனக்கு தெரியாது.

4) லட்சுமி விலாஸ் வங்கி DBS வங்கியுடன் கடந்த 27.11.2020 ல் இணைக்கப்பட்டது என்றால் இணைந்த விவரம் எனக்கு தெரியாது. 27.11.2020ம் தேதிக்கு பிறகு லட்சமி விலாஸ் என்ற பெயரில் வங்கி கிடையாது என்றால் எனக்கு தெரியாது.

5) நான் வட்டி தொகையை வாங்கியதற்கான ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. என்னிடம் ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. கடன் வாங்கிய பின்னிட்டு எவ்வளவு மாதம் வட்டி செலுத்தினார் என்றால் 12 மாதம் செலுத்தினார். காசோலை கொடுத்த போது எனக்கு அசல் மற்றும் வட்டி தொகைக்கு சேர்த்து கொடுத்தார் என்றால் அசலுக்கு மட்டும் காசோலை கொடுத்தார்.

6) வட்டி வேண்டாம் என்பது குறித்து ஏதாவது பேசப்பட்டது குறித்து ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஜலகண்டாபுரத்தில் அண்ணாமலை என்ற பெயரில் பைனான்ஸ் நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. பாலு என்பவர் என் நண்பர் என்றால் இல்லை. கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக உள்ளூரில் வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் இல்லை.

7) நான் காசோலை கொடுத்ததாக குறிப்பிடும் தேதியன்று அப்படி ஒரு லட்சுமி விலாஸ் வங்கி என்பது இல்லை என்றும் அவ்வாறு வங்கி அமலில் இல்லாத போது ஒரு காசோலை கொடுத்தததாக சொல்லி நான் இந்நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள ம.சா.ஆ.1 காசோலையானது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி நடைமுறைக்கு உகந்தது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) அந்த காசோலை திருப்பப்பட்ட பிறகு திருப்பப்பட்டதற்கான நடவடிக்கை மேல் வங்கி ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றிற்கு அறிவிப்பு கொடுத்து நடவடிக்கை எடுத்து அந்த கசோலைக்குரிய உயிர் தன்மை உள்ளதா என அறிந்து கொண்டேனா என்றால் நான் பெறவில்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**